# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 4, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சுதந்திரப் போராட்ட வீரரும், புகழ்பெற்ற எழுத்தாளருமான வ.வே.சு. அய்யரின் நினைவு தினத்தையொட்டி அவருக்கு குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அஞ்சலி செலுத்தினார்.

(i) சங்க இலக்கியம் முதல் பாரதி இலக்கியம் வரை கற்றறிந்து, தனது இலக்கியப் பயணத்தின் வாயிலாக தமிழ் மரபு செழிக்க குறிப்பிடத்தக்க பங்காற்றியவர் வ.வே.சு. அய்யர். சுதந்திரப் போராட்டத்தின் முக்கியத் தூண்களில் ஒருவராக விளங்கியவர்.

2. தமிழகத்தில் 2029-இல் தேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்த வேண்டும் என மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியாவிடம், தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா கோரிக்கை விடுத்துள்ளார்.

3. இந்திய-வங்கதேச எல்லையில் வேலி அமைப்பதற்காக எல்லைப் பாதுகாப்புப் படையிடம் (பிஎஸ்எஃப்) 31 ஏக்கர் நிலத்தை மேற்கு வங்க அரசு ஒப்படைத்தது.

4. 2026-27 ராபி சந்தைப் பருவத்தில் மத்திய அரசின் கோதுமை கொள்முதல் 17 சதவீதம் அதிகரித்து 3.5 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இது தொடர்பாக மத்திய உணவுத் துறை அமைச்சக மூத்த அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

(i) நடப்பு பருவத்தில் இதுவரை 3.5 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட அதிகம். கோதுமை விளையும் முக்கிய மாநிலங்கள் அனைத்திலும் கொள்முதல் நடவடிக்கை நிறைவு பெற்றுவிட்டது.

(ii) இந்திய உணவுக் கழகம் மற்றும் அரசு அமைப்புகள் சார்பில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டது. இதன்மூலம் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அனைவருக்கும் உணவு கிடைப்பதும், பிற சமூக நலத் திட்டங்களில் உணவுப் பொருள்கள் விநியோகம் செய்யவும் முடியும்.

(iii) பஞ்சாப் மாநிலத்தில் அதிகபட்சமாக 1.21 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டது. இதற்கு அடுத்து மத்திய பிரதேசத்தில் 1.04 கோடி டன், ஹரியாணாவில் 80.1 லட்சம் டன், ராஜஸ்தானில் 24 லட்சம் டன், உத்தர பிரதேசத்தில் 17 லட்சம் டன் கோதுமை கொள்முதல் நடை பெற்றுள்ளது. அனைத்து மாநிலங்களிலுமே குறிப்பிடத்தக்க அளவுக்கு கொள்முதல் அதிகரித்துள்ளது என்று தெரிவித்தனர்.

5. மேற்காசிய போர் நிலவரம் காரணமாக விமான எரிபொருள் தொடர்ந்து உயர்ந்து வருவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில், ரூ.10,000 கோடி விமான எரிபொருள் நிலைப்படுத்துதல் நிதி திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(i) இந்தத் திட்டத்தின் கீழ், உள் நாட்டு மற்றும் சர்வதேச விமான சேவைகளை வழங்கும் இந்திய விமான நிறுவனங்களுக்கு நிலைப்படுத்தப்பட்ட விலையில் விமான எரிபொருள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், அரசுக்குச் சொந்தமான எண்ணெய் சந்தை நிறுவனங்களுக்கு ரூ.10,000 கோடி வரை வட்டியில்லா முன்பணம் வழங்கப்படும்.

(ii) சர்வதேச சந்தையில் விமான எரிபொருள் விலை கடந்த மார்ச் மாதம் லிட்டர் 60.50-ஆக இருந்த நிலையில், மேற்காசிய போர் காரணமாக கடந்த மே மாதம் அதன் விலை லிட்டர் ரூ.142-ஆக உயர்ந்தது. இது, விமான நிறுவனங்கள் மீது பெரும் நிதிச்சுமையை ஏற்படுத்தியதால், விமானப் பயணக் கட்டணங்களை விமான நிறுவனங்கள் பன்மடங்காக உயர்த்தின. இந்தச் சூழலில், விமான எரிபொருள் விலை நிலைப்படுத்துவதற்கான நிதி உதவித்திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(iii) இதுகுறித்து மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறுகையில், 'விமானங்களை இயக்குவதற்கான மொத்த செலவில், எரிபொருள் செலவு மட்டும் 40 சதவீத அளவுக்கு பங்கு வகிக்கிறது. மேற்காசிய போர் காரணமாக இந்த விகிதம் மேலும் அதிகரித்துள்ளது. இந்தச் சூழலில், மத்திய அரசு அறிவித்துள்ள நிதி உதவித் திட்டம், இந்திய விமானங்களுக்கான நிலையான விலையில் எரிபொருள் கிடைக்கும் என்பதோடு, விமான இயக்கத்தில் ஏற்படும் இடையூறுகளைத் தடுக்க உதவும். மேலும், விமான பயணக் கட்டணங்கள் பன்மடங்கு உயர்வால் பயணிகளுக்கு ஏற்படும் பாதிப்பும் குறையும்' என்றார்.

(iv) தெலங்கானாவில் ரூ.7,597 கோடியில் நெடுஞ்சாலைத் திட்டம்:

- தெலங்கானா மாநிலத்தில் ரூ.7,597.16 கோடி செலவில் சுமார் 190.76 கி.மீ. தொலைவு தேசிய நெடுஞ்சாலையை அகலப் படுத்தும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- இத் திட்டத்தின் கீழ் தெலங்கானாவில் என்.ஹெச்.63-இன் அர்மூர்- ஜக்டியால் -மஞ்ச்சே ரியேல் நெடுஞ்சாலைப் பிரிவும், என்.ஹெச்.563-இன் ஜக்டியல்-கரீம்நகர் நெடுஞ்சாலைப் பிரிவும் நான்கு வழித்தட தரத்துக்கு அகலப்படுத்தப்பட உள்ளன.

(v) பிகாரில் ரூ. 3,936 கோடியில் நெடுஞ்சாலைத் திட்டம்:

- பிகார் மாநிலத்தில் ரூ.3,936.05 கோடி செலவில் தேசிய நெடுஞ்சாலைகளை நான்குவழித் தடங்களாக மேம்படுத்தும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- இத் திட்டத்தின் கீழ், மாநிலத்தில் என்.ஹெச்.31-இன் ககாரியா-புர்னியே பிரிவும், என். ஹெச்.231 தேசிய நெடுஞ்சாலையும் நான்குவழித் தடங்களாக மேம்படுத்தப்பட உள்ளன.

(vi) ஒடிஸாவில் புதிய கடலோர தேசிய நெடுஞ்சாலை:

- ஒடிஸா மாநிலத்தில் ராமேஸ்வர் நகரம் முதல் பாரதீப் வரை ரூ.8,300.79 கோடி செலவில் புதிய கடலோர தேசிய நெடுஞ்சாலை அமைக்கும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- இரண்டு திட்டங்களாகச் செயல்படுத்தப்படும் இந்தப் புதிய கடலோர தேசிய நெடுஞ்சாலை குர்தா, புரி, கெந்தர்படா, ஜகத்சிங்பூர் மாவட்டங்கள் வழியாக

சுமார் 160.18 கி.மீ. தொலைவுக்கு அமைய உள்ளது.

(vi) மத்திய பிரதேசத்தில் ரூ.4,415.60 கோடியில் சாலைத் திட்டம்:

- மத்திய பிரதேச மாநிலத்தில் ரூ.4.415.60 கோடி செலவில் இரு சாலைத் திட்டங்களை மேற்கொள்ள மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- இத் திட்டத்தின் கீழ், மாநிலத்தில் என்.ஹெச்.347பி-இன் ஹிவர்கேடி-ரோஷ்னி-ஆஷாபூர்-ருதிபிரிவு மற்றும் தேஷ்கோன்- ஜுல்வானியா பிரிவு நெடுஞ்சாலைகள் நான்குவழித் தடங்களாக மேம்படுத்தப்பட உள்ளன.

(vii) தில்லியில் பழைய வாகனங்கள் மாற்று திட்டத்துக்கு ஒப்புதல்:

- தலைநகர் தில்லியில் ஏற்பட்டு வரும் கடுமையான காற்று மாசு பாதிப்பை சற்று குறைக்கும் நோக்கில், தில்லி தேசிய தலைநகர் பிராந்தியத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கும் பழைய பிஎஸ்-4. என்ஜின்களில் இயங்கும் லாரிகள் மற்றும் பேருந்துகள் கட்டாயம் பிஎஸ்-6 என்ஜின்களுக்கு மாற்றுதல் அல்லது மின்சார வாகனங்களாக மாற்றும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- இத்திட்டத்தின் கீழ், பழைய வாகனங்களை மாற்றும் உரிமையாளர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு 5 சதவீத வட்டிச் சலுகையில் கடன்கள் மற்றும் வாகன வகையின் அடிப்படையில் ரூ.4,800 வரையிலான மாதாந்திர எரிபொருள் கூப்பன்கள் வழங்கப்படும். அதுபோல, மின்சார வாகனமாக மாற்றுபவர்களுக்கு பெருமளவில் மானியம் வழங்கப்படும். இந்தத் திட்டத்தின்கீழ், தில்லி, ஹரியாணா, ராஜஸ்தான், உத்தர பிரதேம் உள்ளிட்ட தேசிய தலைநகர பிராந்தியத்துக்கு உட்பட்ட 2.07 லட்சம் வாகன உரிமையாளர்கள் பயனடைவர். இத்திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசுக்கு ரூ.5,041 கோடியும், மாநில அரசுகளுக்கு ரூ.1,601 கோடி அளவிலும் செலவாகும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. வெனிசுலா பொறுப்பு அதிபர் டெல்சி ரோட்ரிகஸ் ஐந்து நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்தார்.

(i) ஒரு காலத்தில் வெனிசுலாவிடம் இருந்து அதிக அளவு கச்சா எண்ணெய் வாங்கும் நாடாக இந்தியா இருந்தது. வெனிசுலா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதிக்கும் வரை, ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 4 லட்சம் பீப்பாய்க்கும் அதிகமான கச்சா எண்ணெய்யை அந்நாட்டில் இருந்து இந்தியா இறக்குமதி செய்தது.

(ii) இந்நிலையில், மேற்காசிய போர் காரணமாக கச்சா எண்ணெய் விநியோகத்தில் இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளதால், வெவ்வேறு நாடுகளிடம் இருந்து கச்சா எண்ணெய்யை கொள்முதல் செய்ய இந்தியா முயற்சித்து வருகிறது.

(iii) இந்தச் சூழலில், இந்தியாவுடனான எரிசக்தி ஒத்துழைப்பை வலுப்படுத்த விரிவுபடுத்தவும், வர்த்தகம் மற்றும் முதலீடு, மருந்து உற்பத்தி மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இந்தியாவுடனான ஒத்துழைப்பைவும் வெனிசுலா பொறுப்பு அதிபர் டெல்சி ரோட்ரிகஸ் இந்தியா வந்தார். புது தில்லியில் பிரதமர் மோடியை அவர் சந்திக்க உள்ளார். அவரின் வருகை இந்தியா-வெனிசுலா உறவை மேலும் வலுப்படுத்தும் என்று இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் சமூக ஊடகத்தில் பதிவிட்டார்.

(iv) கடந்த ஜனவரியில் வெனிசுலா அதிபராக இருந்த நிகோலஸ் மடூரோவை அமெரிக்கா சிறைபிடித்ததைத் தொடர்ந்து, அந்நாட்டின் பொறுப்பு அதிபராக டெல்சி ரோட்ரிகஸ் பதவியேற்றார்.

7. நியாயமற்ற தொழிலாளர் நடைமுறைகளைக் கையாள்வதையும், தனது உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டு, அமெரிக்கா புதிய வர்த்தக வரிகளை விதிக்க உள்ளது.

(i) வரி விதிப்பு முன்மொழிவின் கண்ணோட்டம்

- அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி (USTR) கேத்தரின் தாய் (Katherine Tai), இந்தியா, சீனா, ஜப்பான், பிரேசில் மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட 54 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீது கூடுதலாக 12.5% வரியை விதிக்க முன்மொழிந்துள்ளார்.
- கனடா, ஈக்வடார், ஐரோப்பிய ஒன்றியம், இந்தோனேசியா, மெக்சிகோ மற்றும் பாகிஸ்தான் ஆகிய ஆறு பிற வர்த்தகக் கூட்டாளிகளுக்கு, தனியாக 10% கூடுதல் வரியை விதிக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- குறிப்பிட்ட சில நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஆடை மற்றும் ஜவுளிப் பொருட்களுக்கு, குறைக்கப்பட்ட வரி விகிதங்களைச் செலுத்துவதற்கான ஒரு விதியும் இந்த முன்மொழிவில் சேர்க்கப்பட்டுள்ளது.

(ii) வரிகளுக்கான சட்ட அடிப்படை

- இந்த பரிந்துரைகள், 1974-ஆம் ஆண்டின் அமெரிக்க வர்த்தகச் சட்டத்தின் பிரிவு 301-இன் கீழ் நடத்தப்பட்ட ஒரு விசாரணையைத் தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ளன.
- அமெரிக்க வர்த்தகத்திற்கு நியாயமற்றதாகவோ, பாகுபாடு காட்டுவதாகவோ அல்லது சுமையாகவோ கருதப்படும் வெளிநாட்டு வர்த்தக நடைமுறைகளுக்கு எதிராகப் பதிலடி நடவடிக்கைகளை எடுப்பதற்கான அதிகாரத்தை, பிரிவு 301 அமெரிக்காவிற்கு வழங்குகிறது.
- இந்தச் சட்டக் கட்டமைப்பைப் பயன்படுத்துவதன் முதன்மை நோக்கம், அமெரிக்கத் தொழிலாளர்கள் உலக அளவில் ஒரு சமமான களத்தில் போட்டியிட முடிவதை உறுதி செய்வதே ஆகும்.

(iii) முன்மொழியப்பட்ட வரிகளுக்கான காரணங்கள்

- 12.5% வரி விதிப்பிற்கான முதன்மையான நியாயம் என்னவென்றால், இந்த 54 நாடுகளும் 'கட்டாய உழைப்பைக்' (forced labor) கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்வதைத் திறம்படத் தடை செய்யவோ அல்லது தடுக்கவோ தவறியதே ஆகும்.
- இத்தகைய பொருட்களை உலகச் சந்தையில் அனுமதிப்பது ஒரு நியாயமற்ற போட்டி நன்மையை உருவாக்குகிறது என்றும், அந்த நிலையைச் சமன் செய்யவே அமெரிக்கா முயல்கிறது என்றும் USTR வலியுறுத்துகிறது.
- உள்நாட்டுத் தொழில்துறைகளைப் பாதுகாப்பதன் மூலம், அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு உயர்ந்த ஊதியம் மற்றும் சிறந்த பணிச்சூழலை ஊக்குவிக்கும் வகையிலும் இந்த வரிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- 10% வரி விதிப்பை எதிர்கொள்ளும் ஆறு நாடுகளைப் பொறுத்தவரை, அந்நாடுகளில் கட்டாய உழைப்பிற்கு எதிரான சட்டங்கள் இருந்தாலும், அவற்றைச் செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் போதுமானதாக இல்லை

என்று USTR குறிப்பிட்டுள்ளது.

(iv) மறுஆய்வு செயல்முறை மற்றும் காலவரிசை

- இந்த பரிந்துரைகள் தொடர்பாகப் பொது விசாரணை மற்றும் முறையான ஆய்வை ஜூலை 7, 2026 அன்று நடத்த USTR திட்டமிட்டுள்ளது.
- நேரில் ஆஜராகிச் சாட்சியம் அளிக்க விரும்பும் தரப்பினர் ஜூன் 22-க்குள் தங்கள் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்; அதேவேளையில், எழுத்துப்பூர்வமான கருத்துருக்கள் ஜூலை 6 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
- இந்தப் பொதுக் கருத்துப் பதிவு காலத்தில் பெறப்படும் கருத்துக்களை முழுமையாக மதிப்பிட்ட பின்னரே, இந்த வரிகளைச் செயல்படுத்துவது குறித்த இறுதி முடிவு எட்டப்படும்.

(v) இந்தியாவின் எதிர்வினையும் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளும்

- இந்த 'பிரிவு 301' (Section 301) விசாரணை தொடர்பாக, இந்திய வர்த்தக அமைச்சகம் தற்போது அமெரிக்க அதிகாரிகளுடன் விரிவான கலந்தாய்வுகளில் ஈடுபட்டுள்ளது.
- இச்சார்ந்த மற்றும் பிற தீர்க்கப்படாமல் உள்ள வர்த்தகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், ஒரு இடைக்கால இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்யும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது.
- 'பிரிவு 232'-இன் கீழ் விதிக்கப்படும் வரிகள் போன்ற பிற குறிப்பிட்ட வரிகளுக்கு ஏற்கனவே உட்பட்டுள்ள சில பொருட்களுக்கு, இந்த புதிய 12.5% வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படக்கூடும் என்று இந்திய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.
- இந்த வரி விதிப்பு குறித்த முடிவு இன்னும் ஒரு 'இறுதி ஆணை'யாக அமையவில்லை என்றும், தற்போது நடைபெற்று வரும் இராஜதந்திர மற்றும் சட்டரீதியான ஆய்வுகளின் முடிவையே இது சார்ந்திருக்கும் என்றும் இந்திய அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

8. OPEC மற்றும் OPEC+ கூட்டமைப்புகளிலிருந்து விலக ஐக்கிய அரபு அமீரகம் (UAE) எடுத்த முடிவு

(i) UAE-யின் விலகலுக்கான காரணங்கள்

- பொருளாதாரப் பல்வகைப்படுத்தல் (Vision 2031): மின்சார வாகனங்கள் மற்றும் சூரிய ஆற்றல் போன்ற பசுமை ஆற்றல் (green energy) சார்ந்த தொழில்நுட்பங்களை நோக்கி உலகம் நகர்வதால், எதிர்காலத்தில் எண்ணெய் தேவை குறையக்கூடும் என UAE எதிர்பார்க்கிறது. தனது "Vision 2031" திட்டத்தின் கீழ், தற்போதைய எண்ணெய் வருவாயை முழுமையாகப் பயன்படுத்தி, சுற்றுலா மற்றும் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதாரத்தை நோக்கி மாறுவதற்கான நிதியைத் திரட்ட அந்நாடு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- உற்பத்தி மற்றும் வருவாய் சார்ந்த கட்டுப்பாடுகள்: 2027-ஆம் ஆண்டிற்குள் தனது எண்ணெய் உற்பத்தித் திறனை ஒரு நாளைக்கு 5 மில்லியன் பேரல்களாக உயர்த்த, UAE சுமார் 150 பில்லியன் டாலர்களை முதலீடு செய்துள்ளது. இருப்பினும், OPEC நிர்ணயித்துள்ள ஒதுக்கீட்டுக் கட்டுப்பாடுகள் காரணமாக, தற்போது அதன் உற்பத்தி ஒரு நாளைக்கு 3.4 மில்லியன் பேரல்கள் என்ற அளவிலேயே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சவுதி

அரேபியாவின் தலைமையில் மேற்கொள்ளப்படும் எண்ணெய் உற்பத்திக் குறைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து பின்பற்றுவதில் UAE-க்கு விருப்பமில்லை என்று கூறப்படுகிறது; ஏனெனில், இத்தகைய கட்டுப்பாடுகள் அந்நாடு தனது முழு உற்பத்தித் திறனையும் பயன்படுத்தி தேசிய வருவாயைப் பெருக்குவதைத் தடுக்கின்றன.

(ii) UAE-க்கான மூலோபாய நன்மைகள்

- நாணயப் பரிவர்த்தனை நெகிழ்வுத்தன்மை:OPEC-லிருந்து விலகுவதன் மூலம், எண்ணெய் வர்த்தகத்தை அமெரிக்க டாலரில் மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்ற கட்டாயத்திலிருந்து UAE-யால் விடுபட முடியும். இந்திய ரூபாய் மற்றும் சீன யுவான் போன்ற பிற நாணயங்களைக் கொண்டு எண்ணெய் வர்த்தகம் மேற்கொள்வது குறித்த பேச்சுவார்த்தைகளை UAE ஏற்கனவே தொடங்கியுள்ளது.
- சுயாதீனமான மூலோபாயக் கூட்டாண்மைகள்: OPEC கூட்டமைப்பின் கூட்டு நலன்களிலிருந்து விலகிச் செயல்படும் வகையில், இணையத் தொழில்நுட்பம் (cyber technology) மற்றும் எரிசக்திப் பாதுகாப்பு போன்ற துறைகளில், குறிப்பாக இஸ்ரேலுடனான தனது சொந்த மூலோபாய மற்றும் பாதுகாப்பு உறவுகளை UAE வலுப்படுத்தி வருகிறது.

(iii) உலகச் சந்தையின் மீதான தாக்கம்

- டாலர் ஆதிக்கக் குறைப்பு (De-dollarization) அமெரிக்க டாலர் அல்லாத பிற நாணயங்களைக் கொண்டு எண்ணெய் வர்த்தகம் செய்வதன் மூலம், உலக அளவில் "டாலர் ஆதிக்கத்தைக் குறைக்கும்" முயற்சிகளுக்கு UAE ஆதரவளிக்கிறது. இது அமெரிக்க டாலருக்கான உலகளாவிய தேவையைக் குறைக்கவும், பிற நாடுகள் கையிருப்பில் வைத்திருக்க வேண்டிய டாலர் இருப்புக்களின் அளவைக் குறைக்கவும் வாய்ப்புள்ளது.
- உலகளாவிய எண்ணெய் விலைக் குறைப்பு: OPEC-இன் உற்பத்தி வரம்புகளிலிருந்து UAE விடுபட்ட பிறகும், (ஹார்முஸ் ஜலசந்தி போன்ற பகுதிகளில் நிலவும்) பிராந்திய அளவிலான பதற்றங்கள் தணிந்த பிறகும், அந்நாட்டால் தனது எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க முடியும். UAE-யிடமிருந்து எண்ணெய் விநியோகம் அதிகரிப்பது, உலகளாவிய கச்சா எண்ணெய் விலைகள் குறைவதற்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(iv) இந்தியாவின் மீதான தாக்கம்

- பொருளாதார நிவாரணம்: எண்ணெய் இறக்குமதியில் ஒரு முக்கிய நாடாகத் திகழும் இந்தியா, கச்சா எண்ணெய் விலையில் ஏற்படக்கூடிய சாத்தியமான வீழ்ச்சியால் கணிசமாகப் பயனடையும். இது இந்தியாவின் ஒட்டுமொத்த இறக்குமதிச் செலவுகளைக் குறைக்க உதவும்.
- இருதரப்பு வர்த்தக நன்மைகள்: இந்திய ரூபாயில் எண்ணெய் வர்த்தகம் மேற்கொள்ளும் நோக்கிய நகர்வு, இந்தியாவின் எரிசக்தி வர்த்தகத்தை மேலும் நிலைப்படுத்தி, இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரக் கூட்டாண்மையை வலுப்படுத்தும்.